செ.வெ.எண்: 30 நாள்: 19.01.2020

## போலியோ சொட்டு மருந்து முகாமினை மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் திரு.இரா.துரைக்கண்ணு அவர்கள் தொடங்கி வைத்தார்

தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் ராசா மிராசுதார் அரசு மருத்துவமனையில் போலியோ சொட்டு மருந்து முகாமினை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.ம.கோவிந்த ராவ் இஆப., அவர்கள் தலைமையில், மாண்புமிகு மாநிலங்களவை உறுப்பினர் திரு.ஆர்.வைத்திலிங்கம் அவர்கள் முன்னிலையில், மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் திரு.இரா.துரைக்கண்ணு அவர்கள் இன்று(19.01.2020) தொடங்கி வைத்தார்.

ஐந்து வயதிற்குட்பட்ட அனைத்து குழந்தைகளுக்கும் போலியோ சொட்டு மருந்து வழங்கும் பணியின் கீழ் தஞ்சாவூர் மாவட்டத்தில் 2,36,033 குழந்தைகளுக்கு போலியோ சொட்டு மருந்து வழங்கப்படுகிறது. இதற்காக நகரப் பகுதிகளில் 128 மையங்களும், ஊரகப் பகுதிகளில் 1382 மையங்களும் அமைக்கப்பட்டு, 6040 பணியாளர்களும், 178 மேற்பார்வையாளர்களும் சொட்டு மருந்து வழங்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர். அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்கள், துணை சுகாதார நிலையங்கள், பள்ளிக்கூடங்கள், அரசு மருத்துவமனைகள், தனியார் மருத்துவமனைகள், பேருந்து நிலையங்கள், புகைவண்டி நிலையங்கள், கோயில்கள், சுங்கச்சாவடிகள் மற்றும் மக்கள் கூடும் இடங்களில் போலியோ சொட்டு மருந்து வழங்கப்படுகிறது.

தஞ்சாவூர் ராசா மிராசுதார் அரசு மருத்துவமனையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.ம.கோவிந்த ராவ் இஆப., அவர்கள் தலைமையில், மாண்புமிகு மாநிலங்களவை உறுப்பினர் திரு.ஆர்.வைத்திலிங்கம் அவர்கள் முன்னிலையில், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் திரு.இரா.துரைக்கண்ணு அவர்கள் போலியோ சொட்டு மருந்து முகாமினை தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் திரு.கு.பரசுராமன், தஞ்சாவூர் மாநகராட்சி ஆணையர் திருமதி. ஜானகி ரவீந்திரன், தஞ்சாவூர் மத்திய கூட்டுறவு வங்கி தலைவர் திரு.துரை.திருஞானம், ஒருங்கிணைந்த பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றிய தலைவர் திரு.ஆர்.காந்தி, ஒருங்கிணைந்த கூட்டுறவு அச்சக தலைவர் திரு.புண்ணியமூர்த்தி, மாவட்ட கூட்டுறவு ஒன்றிய தலைவர் திரு. மோகன், தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி முதல்வர் திருமதி.குமுதா லிங்கராஜ், துணை இயக்குனர்(சுகாதாரப் பணிகள்) திரு.ரவீந்திரன், மொத்த கூட்டுறவு பண்டகசாலை தலைவர் திரு.பண்டரிநாதன், நிக்கல்சன் கூட்டுறவு வங்கி தலைவர் திரு.அறிவுடைநம்பி, நிக்கல்சன் கூட்டுறவு வங்கி துணைத் தலைவர் திரு.சரவணன், மொத்த கூட்டுறவு பண்டகசாலை துணைத் தலைவர் திரு.ரமேஷ், பாபநாசம் நகர வங்கி துணைத் தலைவர் திரு. சதீஷ், சுகாதாரத் துறை அலுவலர்கள், மருத்துவர்கள், பணியாளர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

---

செய்தி வெளியீடு : செய்தி - மக்கள் தொடர்பு அலுவலர், தஞ்சாவூர்.